1996 ஆகஸ்ட் 27] [திரு. ம. அப்துல் லத்தீப்]

சொன்னாலும், நடுவர் மன்றத்தை நாம் பெரிதும் நம்பி வந்திருக்கிறோம், போற்றி வந்திருக்கிறோம். இன்றைக்கு பேச்சுவார்த்தை இரண்டு மாநில முதலமைச்சர்களுக்கிடையே நடந்து மீண்டும் தமிழக முதல்வர் அவர்கள் கர்நாடக முதலமைச்சரை சந்திக்கக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அதை நாம் ஏற்றுக் கொண்டு இருக்கிறோம், வரவேற்கிறோம். ஆனால், எந்தப் பேச்சுவார்த்தை மூலமாக என்ன முடிவு ஏற்பட்டாலும் அது நடுவர் மன்றத்தின் மூலமாகத்தான் தீர்க்கப்பட வேண்டும், தீர்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்பது தமிழகம் கடைப்பிடித்து வருகிற ஒரு கொள்கையாகும், நம்முடைய நிலையாகும். ஆனால், நடுவர் மன்றத்தினுடைய தலைவரே இல்லாமல், நடுவர் மன்றத்தினுடைய தலைவர் ராஜினாமா செய்து பல மாதங்கள் ஆகியும், மத்திய அரசு, ராஜினாமா செய்த அவருக்குப் பதிலாக இன்னொருவரை நியமிக்காமல் இருப்பது, நடுவர் மன்றமே இல்லாமல் ஆகிவிடுமோ என்ற ஐயப்பாடு நமக்கு ஏற்பட வழி செய்கிறது. எனவே, அது குறித்து, தமிழக அரசு, மத்திய அரசினுடைய கவனத்தை ஈர்த்திருக்கிறதா? உடனடியாக ஒரு நடுவர் மன்றத் தலைவரை நியமிக்க வேண்டுமென்று கோரியிருக்கிறதா? அப்படிக் கோரியிருந்தால் மத்திய அரசாங்கத்தினுடைய முடிவு என்ன? பதில் என்ன? இதைக் குறித்துத்தான் நாம் மிகுந்த கவலை அடைந்திருக்கிறோம். இது குறித்து முதல்வர் அவர்கள்....

முற்பகல் 11-00

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவரும், மற்ற உறுப்பினர்களும், இறுதியாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களும் நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பைப் பெறுவதற்கு நடுவர் மன்றத்திலே தலைமை வகிக்கும் நீதிபதி பதவி விலகிவிட்டாரே, அவருக்குப் பதிலாக வேறு ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவாரா:— அதுபற்றி இந்த அவையிலே பேசப்பட்ட பிரச்சினைகளுக்கு முடிவு ஏற்பட்டுவிட்டதா என்ற வினாவை எழுப்பியிருக்கிறார்கள், நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பை எதிர்நோக்கித்தான் நடுவர் மன்றமே தேவை என்ற அந்த முடிவை எடுத்து அதை வலியுறுத்தி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயே கடந்த காலத்திலே நடுவர் மன்றம் அன்றிருந்த மத்திய அரசால், திரு. வி.பி. சிங் அவர்களால் அமைக்கப்பட்டது என்பதை யாரும் மறந்து விட முடியாது.

இப்போது நடுவர் மன்றத்தினுடைய தலைவர் பதவி விலகியதற்குப் பிறகு ஏற்பட்டுள்ள ஒரு சங்கடமான சூழ்நிலை என்ன ஆகுமோ என்ற

எதிர்பார்ப்பு, ஆவல் இவைகளுக்கு இடையே இந்த அவையிலேயே இரண்டொருமுறை அதுபற்றி பேசி, இரண்டு கடிதங்களும் தமிழக அரசின் சார்பாக இந்திய பிரதமர் அவர்களுக்கு எழுதப்பட்டிருக்கிறது. நான் சென்ற முறை டெல்லிக்குச் சென்றபோது பிரதமர் அவர்களைச் சந்தித்து அதுபற்றி அவர்களிடத்திலே பேசியிருக்கிறேன். அப்போது அவர் சொன்னது, நடுவர் மன்றத் தலைவரை நியமிப்பதிலே எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. அது உச்ச நீதிமன்றம் மூலமாக வரவேண்டிய ஒன்று. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு தெரிவிப்பதற்கு இப்போது வாய்ப்பு இல்லை; காரணம், அவர் வெளிநாடு சுற்றுப்பயணம் சென்றிருக்கிறார், வந்த பிறகு நிச்சயமாக அவருக்கு எழுதுவோம் என்று குறிப்பிட்டார்கள், அதற்குப் பிறகு தாமதம் ஏற்பட்ட காரணத்தால், இன்றையதினம் இந்த அவையில் நான் ஏற்கெனவே உறுதியளித்தபடி, நடுவர் மன்றத்தினுடைய தலைவரை நியமிப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்துகின்ற வகையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படுவதாக இருந்து, அதற்கான கோப்புகள் எல்லாம் தயாராகி பொதுப்பணித் துறையும், பொதுப்பணித் துறை அமைச்சரும் நானும் கையெழுத்திட்டு அந்தத் தீர்மானம் தயாராகவே இருக்கின்ற சூழ்நிலையில், 24-ந் தேதி அன்று பிரதமர் அவர்கள் சென்னைக்கு ஒரு நிகழ்ச்சிக்கு வந்தபோது அவரோடு பேசுகின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அதிலும் குறிப்பாக, கலைவாணர் அரங்கத்திலிருந்து விமான நிலையம் செல்லுகிற வரையில் ஒரே காரில் இருவரும் பயணம் செய்த போது அதுபற்றி நான் கேட்டேன். தீர்மானம்கூட தயாராக இருக்கிறது. நாங்கள் சட்டசபையிலே நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்று சொன்னபோது அவர் சொன்னார். உச்ச நீதிமன்றத்திற்கு அதுபற்றி நான் எழுதிவிட்டேன். தலைவரை நியமிக்க வேண்டும் என்று எழுதிவிட்டேன். எனவே தீர்மானம் தேவைப்படாது என்று சொன்னார். இதை நான் அவையிலேயே வெளியிடலாமா என்று சொன்ன பிறகு, வெளியிடலாம், தாராளமாக, என்று சொல்லியிருக்கிறார். எனவே பிரதமர் உச்ச நீதிமன்றத்திற்கு நடுவர் மன்றத்திற்கான தலைவரை நியமிக்க வேண்டும் என்று எழுதியிருப்பதற்கு, இந்த மன்றத்தின் சார்பாக அதற்கு நன்றி கூறிக்கொண்டு, விரைவிலேயே அந்த நடுவர் மன்றத்தினுடைய தலைவர் நியமிக்கப்படுவார் என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் 15-ஆம் தேதிக்குப் பிறகு சந்திப்பதாக இருந்த நிலையில், ஏன் சந்திக்கவில்லை என்று கேட்டிருக்கிறார். அங்கே சட்டப்பேரவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம்பிக்கையில்லாத்

1996 ஆகஸ்ட் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

தீர்மானம் அந்த அரசின்மீது வந்திருக்கின்ற சூழ்நிலையில் அவர்கள் அதிலே பரபரப்பிலேயிருக்கிற இந்தக் காலகட்டத்தில், சந்திப்பை ஒத்திவைத்திருக்கிறோமேயல்லாமல் நிச்சயமாக சந்திப்பு உண்டு. எந்தச் சந்திப்பாக இருந்தாலும், எந்தப் பேச்சுவார்த்தையாக இருந்தாலும் அது நடுவர் மன்றத்தை, அந்தக் கோட்டை தாண்டியதாக இருக்காது என்ற உறுதியை நான் அளிக்கின்றேன். விரைவில் சந்தித்து தொடர்ந்து பேசுவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: போதிய விளக்கம் சொல்லியாகிவிட்டது. இதற்குமேலே என்ன கேட்கப் போகிறீர்கள்? உட்காருங்கள்.

(ஆ) சட்டமன்றப் பார்வையாளர் மாடத்திற்கு வரும் பார்வையாளர்களைக் கண்காணித்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையில் நம்முடைய பார்வையாளர்கள் மாடத்திலிருந்து நோட்டீஸ் எல்லாம் வீசினார்கள். அதற்கு தண்டனை எல்லாம் கொடுக்கப்பட்டது. அதற்குள்ளே நான் போகவில்லை. அந்த நோட்டீஸிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் பகத்சிங் குண்டு வீசியது போல இன்று எங்கள் ஆபாச எதிர்ப்பு போர் முழக்கம் இருக்கும் என்று ஒரு எச்சரிக்கை விடுவதுபோல இருக்கிறது. ஆகவே நம்முடைய பார்வையாளர்கள் மாடத்தில் வருபவர்களை கொஞ்சம்—நம்முடைய முதலமைச்சர் அவர்களிலிருந்து அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வரை இந்த அரசாங்கமே இங்கே இருக்கின்ற இந்த பெரிய அவையில் ஏதாவது ஒரு அசம்பாவிதம் நடந்து விடாதவாறு நம்முடைய காவலர்கள் இங்கே பார்வையாளர்களாக வருபவர்களை—கண்காணிக்கின்ற முறையில் ஒரு சிறப்பான ஏற்பாட்டை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நடந்த நிகழ்ச்சி ஏதோ ஆர்வத்தால் உந்தப்பட்ட சில அப்பாவிப் பெண்களுடைய செயல் என்ற காரணத்தால் தான் அவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்றும் ஒரு

நாள் தண்டனைக் கொடுத்து விடுதலை செய்தால் போதும் என்ற கருத்துக்களும் மாண்புமிகு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டன. எனக்கு, பிறகு கிடைத்துள்ள தகவல், அவர்கள் ஒரு தீவிரவாத இயக்கத்தின் சார்பாக அனுப்பப்பட்டவர்கள் என்ற தகவல் கிடைத்திருக்கிறது. அதையும், விசாரித்துதான், அதை நான் முழுமையாக நம்ப வேண்டும் என்றாலும்கூட, இப்படி கிடைக்கின்ற தகவலை அலட்சியப்படுத்திவிடக் கூடாது ஏன் என்றால் தனிப்பட்டவர்களுடைய பாதுகாப்புக்காக மாத்திரம் அல்ல, இந்த அவையினுடைய எல்லா உறுப்பினர்களுடைய பாதுகாப்புக்காகவும் அதை நாம் தீவிரமாக கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நேற்று வந்தவர்கள் கையிலே வைத்திருந்த சில பிளேடுகள் போன்ற ஆயுதங்களால் அங்கே கட்டப்பட்டு இருக்கின்ற கம்பி வலைகளை எல்லாம் முன்கூட்டியே கொஞ்சம் கொஞ்சமாக அறுத்து யாருக்கும் தெரியாமல் அதை அறுத்து அதன் வழியாகத்தான் துண்டு அறிக்கைகளை இங்கே போட்டிருக்கிறார்கள். அப்படி அதை அறுத்து கொஞ்சம் வழியை பெரியதாக செய்த பிறகு துண்டு அறிக்கைகளை மாத்திரம் அல்ல வேறு எதையும் போடலாம். அதையும் நாம் மறந்து விடக்கூடாது.

எனவேதான், இப்படி அனுமதிக்கப்படுகின்றவர்கள் மிகுந்த எச்சரிக்கையோடு அனுமதிக்கப்பட வேண்டும் என்று இன்றைக்கு பேரவைத் துறையினுடைய செயலாளர் மூலமாக ஒரு அறிவிப்பு எல்லா மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. அதை ஏதோ பத்தோடு பதினொன்று என்ற தாளாக பல பேர் படிக்காமலேகூட இருந்து இருக்கலாம் (சிரிப்பு) பல பேர் சிரிப்பதைப் பார்த்தால் படிக்கவில்லை என்று நன்றாகத் தெரிகிறது. (சிரிப்பு) நான் சொன்ன பிறகு கையிலே எடுத்ததற்காக நன்றி, (சிரிப்பு) அதிலே முக்கியமாக பார்வையாளர் மாடத்திற்கு அனுமதிச் சீட்டு கோரும் விண்ணப்பப்ப டிவத்தில் யாருக்காவது அந்த அனுமதிச்சீட்டு தேவையோ அவர் தமக்கு நேரிடையாக நன்கு தெரிந்தவர் என்றும் அதனால் அவர் பார்வையாளர் மாடத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பெறலாம் என்றும் அதில் சான்று கூறவேண்டும் மாடத்தில் இருக்கும்போது ஒரு பார்வையாளரின் நடத்தைக்கு முழுப் பொறுப்பும் அவரை அறிமுகப்படுத்திய உறுப்பினரைச் சாரும். நன்னடத்தைக்கு என்று இருக்கிறது. அதை நடத்தைக்கு என்று மாற்றிக் கொள்ளவேண்டும். ஏன் என்றால் நான் நன்னடத்தைக்கு தான் பொறுப்பு, தீய நடத்தைக்கு பொறுப்பு அல்ல என்று சொல்லிவிடக் கூடும். எனவே, ஒரு பார்வையாளர் நடத்தைக்கு முழுப்பொறுப்பும் அவரை அறிமுகப்படுத்திய உறுப்பினரைச் சாரும்.

இதனைக் கருத்தில் கொண்டு, குறிப்பாக இனி வருங்காலங்களில் எந்த ஒரு உறுப்பினரும் பார்வையாளர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கும் நேரத்தில் பார்வையாளர்களை நன்கு அறிந்திருந்தாலொழிய அனுமதிச்சீட்டு வழங்குவது முறையாகாது என்பதையும் அப்படி வழங்கும் பட்சத்தில் அதற்கான முழுப் பொறுப்பையும் அவர்களே ஏற்கவேண்டி வரும் என்றும் அறிவுறுத்தப்படுகிறார்கள் என்று துறைச் செயலாளர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு அறிவிப்பு தரப்பட்டிருக்கிறது. அதை கடைப்பிடிக்க வேண்டும் என்றும் நான் அவை முன்னவரின் சார்பாக, இந்த பேரவை அலுவலகத்தின் சார்பாக, மிகுந்த பணிவன்போடு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன்.

இதுபோன்ற தீவிரவாதிகள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கோரிக்கைகளை முன் வைத்து ஏதோ அதற்காக தான் வந்தது போலவும், அதற்காக தான் ஆர்பாட்டம் நடத்துவது போலவும் காட்டிக்கொண்டு அந்த வேடத்திலே வந்து இருக்கிறார்கள் என்றால் அது உண்மையிலேயே நாம் எச்சரிக்கையாக கவனிக்க வேண்டிய ஒன்று.

அதற்கு யாரோ, அவர்கள் கையெழுத்துப் போடவில்லை, அதற்கு யாரோ இங்குள்ள சிலர் அதற்கு உதவி புரிந்து இருக்கிறார்கள் என்றும் போலீசாருடைய விசாரணையிலிருந்து தெரியவருகிறது. அப்படி உதவி புரிந்தவர்கள் பத்திரிகையாளர் மத்தியிலே உள்ளவர்கள் என்பதையும் கேட்கும்போது நான் மிகுந்த வேதனைப்படுகிறேன். இருந்தாலும் போலீசாருடைய புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(இ) முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர் வெங்கடராமன் அவர்களுக்கு டெல்லியில் வீடு ஒதுக்கப்பட்டுள்ளதாக வந்த பத்திரிகைச் செய்தி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. அப்துல் லத்தீப்.

திரு. ம. அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ் தினத்தாள் ஒன்றில் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. நம்முடைய முன்னாள் குடியரசுத் தலைவர் மரியாதைக்குரிய திரு. ஆர். வெங்கடராமன் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் இது சம்பந்தமாக என்னிடம் எந்த அறிவிப்பும் தரவில்லை.